**செ. கு. எண்**:188 **நாள்**:22.05.2012

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

அறிக்கை – 22.5.2012

ராமநாதபுரம் மாவட்டம், முதுகுளத்தூர் வட்டம், முதுகுளத்தூர் நகர கிழக்குப் பள்ளிவாசல் மேல்நிலைப் பள்ளி விளையாட்டு மைதானத்தில் 20.5.2012 அன்று கிரிக்கெட் விளையாடிக் கொண்டிருந்த போது, இடி, மின்னல் தாக்கியதில் கடலாடி வட்டம், கீழ் ஆப்பனூர் கிராமத்தைச் சேர்ந்த திரு. காளிமுத்து என்பவரின் மகன் திரு. எரோமியோ, திரு. தாசன் என்பவரின் மகன் திரு. டேனியல் ஆகிய இருவரும் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர் என்ற செய்தியையும்;

திருநெல்வேலி மாவட்டம், வீரகேரளம்புதூர் வட்டம், மருக்காலங்குளம் கிராமம், தங்கம்மாள்புரத்தைச் சேர்ந்த திரு. மாடசாமி என்பவரின் மனைவி திருமதி பேச்சியம்மாள் 21.5.2012 அன்று பணி முடித்து விட்டு வீட்டிற்கு திரும்பும் போது, இடி, மின்னல் தாக்கியதில் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

திருச்சிராப்பள்ளி மாவட்டம், மணப்பாறை வட்டம், கருப்பூர் கிராமம், அழகக்கவுண்டம்பட்டியைச் சேர்ந்த திரு. பொன்னக் கவுண்டர் என்பவரின் மகன் திரு. வெள்ளக்கண்ணு வீட்டின் மீது 21.5.2012 அன்று இடி, மின்னல் தாக்கியதில் வீட்டிலிருந்த திரு. வெள்ளக்கண்ணு, அவரது மனைவி திரு. தங்கம்மாள் மற்றும் மகள் சுந்தரவள்ளி ஆகிய மூவரும் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர் என்ற செய்தியையும்;

கடலூர் மாவட்டம், விருத்தாசலம் வட்டம், கொல்லிருப்பு கிராமத்தைச் சேர்ந்த திரு. கருணாநிதி என்பவரின் மகன் பாண்டித்துரை 21.5.2012 அன்று திறந்த வயல்வெளியில் கிரிக்கெட் விளையாடிக்கொண்டிருந்த போது இடி, மின்னல் தாக்கியதில் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்ற செய்தியையும் அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

இந்தத் துயரச் சம்பவங்களில் அகால மரணமடைந்த எரோமியா, டேனியல் பேச்சியம்மாள், வெள்ளக்கண்ணு, தங்கம்மாள், சுந்தரவள்ளி மற்றும் பாண்டித்துரை குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், இவ்விபத்தில் காலமான திரு. எரோமியா, திரு. டேனியல், திருமதி பேச்சியம்மாள், திரு. வெள்ளக்கண்ணு, திருமதி தங்கம்மாள், செல்வி சுந்தரவள்ளி மற்றும் திரு. பாண்டித்துரை ஆகியோரின் குடும்பத்தினருக்கு மாநில பேரிடர் தணிப்பு நிதியிலிருந்து ஒரு லட்சம் ரூபாய் உடனடியாக வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழக முதலமைச்சர்

**வெளியீடு: –**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.**